**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S. TAMILNADU CEMENTS CORPORATION LIMITED (ALANGULAM LIMESTONE MINES-II), G.O.NO.871, LAKSHMIPURAM, GOPALAPURAM AND VADAKARAI VILLAGES OF VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 22.02.2024, 12.00 NOON AT PERIYATHAI KANDASAMY KALYANA MANDAPAM, 3/367-A, MANAVALAN THOTTAM, ALANGULAM VILLAGE, RAJAPALAYAM VIA, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M. Sivakumar | : | Revenue Divisional Officer<br>Sattur. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 4 | P.Muthupandeeswari | : | Tahsildar,<br>Vembakottai Taluk.<br>Virudhunagar |
| 5 | V. Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |

Public, Project proponent 116 Nos (List enclosed)

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M/s.Tamilnadu Cements Corporation Limited (Alangulam Limestone Mines-II), G.O.No.871, Lakshmipuram, Gopalapuram and Vadakarai Villages of Vembakottai Taluk, Virudhunagar District was held at Periyathai Kandasamy Kalyana Mandapam, 3/367-A, Manavalan Thottam, Alangulam Village, Rajapalayam Via, Vembakottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public

notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 12.01.2024. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.Tamilnadu Cements Corporation Limited (Alangulam Limestone Mines-II), G.O.No.871 to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

1.Thiru.Janagiraman, Vadagarai:

Thiru.Janagiraman said that earlier he worked in this cement plant. The cement plant is functioning over an area of about 200 acres and this cement plant will be operational again if the white stones are quarried. Further, he asked what will they do, if black stone are mined. He said that, earlier 1800 workers and 300 contract workers worked in this cement plant; but now it is not in operation. So, this project should be approved to develop this cement plant operation.

2.Thiru.Mariyappan, Kurinchiyapatti:

Thiru.Mariyappan said that the welcomes this mining activity since this will be beneficial for cement plant and their village. Further, he asked for a clarification regarding end use of mined stones from this quarry. Also, said that if the limestone quarried is transported to other places for manufacturing of cement, we will conduct protest on behalf of our group. He also asked why the details of conducting meeting was not informed to public representatives. Then how the common people know about this meeting.

3.Thiru.Kannan, Sivalingapuram:

Thiru.Kannan said that the entire locations of this mining activity belongs to their village. He said that already more than 2500 peoples were employed in this mining and cement plants. There will be no pollution due to this project. We will get employment opportunities only if the cement plant is under operation. He welcomed this project.

4.Thiru.Benatic, Mathakovilpatti:

Thiru.Benatic said that except few, all are local public who are all here. Further, said that our village people have no alternative business and this mining activity must be approved. He also demanded compensation to the families of those who died in the Vembakottai fire crackers unit. He also welcomed this project.

5.Thiru.Selvaraj, Melur, Madurai District:

Thiru.Selvaraj said that he also worked in the quarry previously and he knows well about its advantages and dis-advantages of mining operation. He also said that many Rules and Regulation have been established to avoid Environmental Impact in quarries. Further, he said that there was no prior proper intimation about this meeting to the local people and he comes to the meeting after knowing it through the website. He also said that generally no air quality monitoring survey is conducted in any quarries, seismic data monitoring is not carried out and fencing is not erected properly. He also informed that the quarries are being operated even

after the expiry of the mining approval period. Further, he said that details of industries within 10 km radius are not furnished. He also said terms of reference issued is not in our mother tongue and there is no details about hydrological study. He also said that there is no adequate green belt and proper procedures are not followed up in quarries for blasting. He also said that Vembakottai dam is located at a distance of 4.5 km and Alangulam village is nearer to the site. Hence permission should not be given to this project.

6.Mr.Sadhuragiri, Viduthalai Siruthai Munnetra Kazhagam:

Mr.Sadhuragiri said that when this cement plant is not operational, it was taken up by plant safety committee to carry out the functions of cement plant. There is no harm due to this project and our village became a town due to the operation of cement plant and educated graduates got get employment. Hence, he welcomed this project.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written.

With this, the meeting came to the end.

29.2.2024

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer,
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 9 – pages, 116 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வட்டம், லட்சுமிபுரம், கோபாலபுரம் மற்றும் வடகரை கிராமங்களில் தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம் - II, அரசாணை எண் : 871 ) அவர்களால் 420.25.0 ஹெக்டர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம் தொடர்பாக 22.02.2024 நண்பகல் 12.00 மணியளவில் தி/ள். பெரியதாய் கந்தசாமி கல்யாண மண்டபம், 3/367-ஏ, மணவாளன் தோட்டம், ஆலங்குளம் கிராமம், இராஜபாளையம் வழி, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. மு. சிவகுமார் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர் |
| 2 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு.து.மு.கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 4 | திருமதி.பா.முத்துபாண்டீஸ்வரி | : | வட்டாட்சியர்,<br>வெம்பக்கோட்டை வட்டம்,<br>விருதுநகர். |
| 5 | செல்வி.வே. கலைஜோதி | : | உதவிப் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 116 நபர்கள்
(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

வெம்பக்கோட்டை வட்டம், லட்சுமிபுரம், கோபாலபுரம் மற்றும் வடகரை கிராமங்களில் தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம் - II, அரசாணை எண்: 871) நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின்

கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். பெரியதாய் கந்தசாமி கல்யாண மண்டபம், 3/367-ஏ, மணவாளன் தோட்டம், ஆலங்குளம் கிராமம், இராஜபாளையம் வழி, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 22.02.2024 நண்பகல் 12.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் மற்றும் ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 12.01.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/எ்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம் - II, அரசாணை எண் :871) நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. <u>திரு.ஜானகிராமன், வடகரை:</u>

திரு.ஜானகிராமன் அவர்கள், முன்னதாக இந்த சிமெண்ட் ஆலையில் வேலை பார்த்ததாகவும் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த சிமெண்ட் ஆலைக்கு வெள்ளைக் கற்கள் எடுத்தால் திரும்பவும் சிமெண்ட் ஆலை செயல்படும் என்றும் கருப்பு கற்கள் எடுத்தால் என்ன செய்வீர்கள் எனக் கேட்டார். மேலும், ஏற்கனவே 1800 தொழிலாளர்கள் மற்றும் 300 ஒப்பந்த தொழிலாளர்கள் இந்த ஆலையில் வேலை பார்த்ததாகவும் இப்போது முடங்கி கிடப்பதாகவும் தெரிவித்தார். எனவே இந்த சிமெண்ட் ஆலையை மேம்படுத்த இத்திட்டம் வரவேண்டும் எனவும் கூறினார்.

2. <u>திரு.மாரியப்பன், குறிஞ்சியாபட்டி:</u>

திரு.மாரியப்பன் அவர்கள், இச்சுரங்கம் அமைவதினால் இந்த சிமெண்ட் ஆலைக்கும் இப்பகுதி மக்களுக்கும் நன்மை எனில் இத்திட்டத்தினை வரவேற்பதாகத் தெரிவித்தார். மேலும், இச்சுரங்கத்தில் தோண்டி எடுக்கப்படும் கற்கள் எதற்கு பயன்படுத்தப்படும் என்பதைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார். மேலும், இங்கு தோண்டி எடுத்த சுண்ணாம்புக் கற்களை வேறு இடத்திற்கு அனுப்பினால் அ.தி.மு.க சார்பில் கடுமையான போராட்டம் நடத்த உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், இந்தக் கூட்டம் நடைபெறுவதற்கான முன்னறிவிப்பினை மக்கள் பிரதிநிதிகளுக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்றும் பின்னர் மக்களுக்கு எவ்வாறு தெரிந்திருக்கும் என்றும் கூறினார்.

3. <u>திரு.கண்ணன், சிவலிங்கபுரம்:</u>

திரு.கண்ணன் அவர்கள், இந்த சுரங்கம் அமைவிடம் முழுவதும் எங்கள் கிராமத்தை சார்ந்ததே. மேலும் ஏற்கனவே இந்த சுரங்கம் மற்றும் சிமெண்ட் ஆலைகளில் 2500 க்கும் மேற்பட்டடோர் வேலை பார்த்தனர் எனவும் தெரிவித்தார். எனவே இத்திட்டம் அமைவதால் மாசு ஏதும் இல்லை என்றும், சிமெண்ட் ஆலை செயல்பட்டால்தான் வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவும் கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

4. <u>திரு.பெனடிக், மாதா கோவில்பட்டி:</u>

திரு.பெனடிக் அவர்கள் இக்கூட்டத்திற்கு வந்திருக்கும் சிலரைத் தவிர மற்ற அனைவரும் பொதுமக்கள் தான் என தெரிவித்தார். மேலும், எங்களுக்கு மாற்று தொழில் ஏதும் கிடையாது எனவும், இந்த சுரங்கம் கண்டிப்பாக அமைய வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் தற்போது வெம்பக்கோட்டை பட்டாசு ஆலையில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்து இத்திட்டத்தினை வரவேற்பதாக கூறினார்.

5. <u>திரு.செல்வராஜ், மேலூர், மதுரை மாவட்டம்:</u>

திரு.செல்வராஜ் அவர்கள், இக்குவாரிகளில் முன்பு அவரும் வேலை பார்த்துள்ளதாகக் கூறி அதன் நன்மை தீமைகள் பற்றி அவருக்கு நன்றாக தெரியும் என தெரிவித்தார். மேலும், குவாரிகளில் சுற்றுச்சூழல் பாதிப்பை தவிர்க்கவே பல சட்ட விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். மேலும் உள்ளூர் மக்களுக்கு இக்கூட்டம் பற்றிய முறையான முன்னறிவிப்பு ஏதும் இல்லை என்றும் அவர் இணையதளம் மூலம் இக்கூட்டம் பற்றி தெரிந்து வந்ததாகவும் கூறினார். மேலும், பொதுவாக எந்த குவாரிகளிலும் காற்றுத்தர ஆய்வு மேற்கொள்வதில்லை, நில அதிர்வுகள் கண்காணிக்கப்படுவதில்லை, வேலிகள் முறையாக அமைக்கப்படவில்லை. மேலும், அனுமதிக்காலம் முடிந்தும் குவாரிகள் தோண்டப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும், சுரங்க திட்டம் பற்றி தெளிவாக குறிப்பிடப்படவில்லை எனவும், 10 கிமீ சுற்றளவில் உள்ள தொழிற்சாலை விவரங்கள் வழங்கப்படவில்லை எனவும்

தெரிவித்தார். மேலும், Terms & Reference தமிழில் இல்லை மற்றும் Hydrological Study பற்றிய தகவல்கள் ஏதுமில்லை எனவும் தெரிவித்தார். போதுமான பசுமை வளையம் இல்லை, குவாரிகளில் வெடி வைப்பது முறையாக பின்பற்றவில்லை எனவும் 4.5 கிமீ தூரத்தில் வெம்பக்கோட்டை அணை உள்ளதாகவும், மேலும் ஆலங்குளம் கிராமம் அருகில் உள்ளதாகவும் தெரிவித்து இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது என தெரிவித்தார்.

6. திரு.சதுரகிரி, விடுதலை சிறுத்தை முன்னேற்ற கழகம்:

திரு.சதுரகிரி அவர்கள், இந்த சிமெண்ட் ஆலை மூடப்பட்டபோது ஆலை பாதுகாப்பு கமிட்டி மூலம் மீண்டும் இயக்கப்பட்டதாகவும் இதனால் எந்த வித பாதிப்பும் இல்லை எனவும் தெரிவித்தார். இந்த ஆலை செயல்பட்டதால் கிராமமாக இருந்த ஊர் இன்று பெரும் நகரமாக மாறிவிட்டது எனவும், படித்த பட்டதாரிகளுக்கம் வேலை கிடைத்தது எனக் கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக் கூற வேறு யாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

28.2.2024

| | |
|---|---|
| மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,<br>விருதுநகர் | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடுநகல் (மொத்தம் - 9 பக்கங்கள், 116 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).